**செய்தி வெளியீடுஎண்.48/2017** **நாள் 31.07.2017**

# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பணமில்லாத பரிவர்த்தனையை எளிதாக்குவதற்கு விற்பனை முனைய எந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது

-----

சென்னைக் குடிநீர் வாரியம் வரி மற்றும் கட்டணத்தின் நிலுவைத்தொகையை வரி செலுத்துவோர் மற்றும் நுகர்வோரிடமிருந்து பணம், காசோலை, வரைவு காசோலை, நிகரவங்கி மற்றும் இணையதளத்தின் வாயிலாக பற்று மற்றும் கடன் அட்டை போன்ற பல்வேறு வழிகளின் மூலமாக பெறுகிறது.

சென்னைக்குடிநீர் வாரியம் மற்றொரு கட்டண முறையாக பணமில்லாத பரிவர்த்தனை (Point of Sale) வழியாக பணமாற்ற நடவடிக்கையை தொடங்கியுள்ளது. குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி மற்றும் கட்டணங்கள் 114 பணம் செலுத்தும் மையங்களின் வாயிலாக சென்னையில் உள்ள 15 பகுதிகளில் ( 81 சென்னை பழைய பகுதி மற்றும் 33 புதிய சேர்க்கப்பட்ட பகுதி) பெறப்படுகிறது. அனைத்து 114 பணம் செலுத்தும் மையங்களும் கொடுக்கப்பட்டுள்ள பணமில்லாத பரிவர்த்தனை (Point of Sale) இயந்திரங்கள் வழியாக வரி மற்றும் கட்டணத்தின் நிலுவைத்தொகையை பற்று மற்றும் கடன் அட்டை மூலம் செலுத்த முடியும். பணமில்லாத பரிவர்த்தனை (Point of Sale) இயந்திரங்கள், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகிய அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கட்டணமில்லாமல் பெறப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்